திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிவகாசியில் கிட்டத்தட்ட 40 வெரைடீஸ் பட்டாசுகள்தான் உற்பத்தியாகின்றன. இங்கே உற்பத்தியாகும் பட்டாசுகளைப் படிப்பறிவில்லாத மக்கள்தான் தயாரிக்கிறார்கள். அவர்கள்தான் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலை நாடுகள் குறிப்பாக சீனா போன்ற நாடுகள் கிட்டத் திட்ட 160 வெரைடீஸ் உற்பத்தி செய்கிறார்கள். அப்படி சிவகாசியிலும் உற்பத்தி செய்வதற்கு கெமிகல் இன்ஜினியரிங் பயிற்சியைச் சிவகாசியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 530, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

530—

வேளாண்மை அபிவிருத்தியில் புதிய திட்டங்கள்.

*5425—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேளாண்மை அபிவிருத்தியில் அரசு புதிய திட்டங்கள் ஏதேனும் புகுத்த உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மை அபிவிருத்தியில் புதிய திட்டங்களை அரசு புகுத்த இருக்கிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டங்களைப் புகுத்த இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல தகவல் தந்திருக்கிறார்கள். தற்போது நம்முடைய விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்பாக இருக்கும் செயற்கைக்கோள்கள் வானிலே பறந்து, விவசாயிகளுக்கு வேண்டிய தகவல்களைத் தந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தகவல்கள் எல்லாம் அண்ணா யூனிவர்சிட்டிக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. அது மீண்டும் கோவையிலே இருக்கும் அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டிக்குச் சென்று, அங்கிருந்து விவசாயிகளை வந்து அடைய வேண்டும். அதற்கான திட்டமும் இங்கே இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 9]

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கை வருகின்ற 15-ந் தேதி வர இருக்கிறது. அதிலே என்னுடைய உரையில் இதற்கு விரிவான பதில் சொல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ரொம்ப விரிவான கேள்வி. அமைச்சர் மானியக் கோரிக்கையில் சொல்வதாகத் தெரிவித்திருக்கிறார்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக ஆறப் பொறுக்கக் காத்து இருக்கிறேன். இன்னொரு கேள்வியும் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். குறிப்பாக "to set up horticultural estates in the 8th plan, a provision of 25 Crores has been proposed." என்று தொழில் துறை மானியக் கோரிக்கை கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை மூலமாக அந்தப் பணம் செலவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையைச் சேர்ந்த குறிப்புப் புத்தகம் வைக்கப்படும். உறுப்பினர் அவர்கள் அதைப் பார்த்து கேள்வியை எழுப்ப வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 531, டாக்டர் பீட்ரிக் டி' சோசாக், மாண்புமிகு சமூகநலத் துறை அமைசசர்.

531—

Working Women's Hostal in City.

* 3786—DR. THIRUMATHI BEATRIX D' SOUZA : Will the Hon. the Minister for Social welfare be pleased to state:

(a) Whether the Department of Social Welfare Runs Working Women's Hostels In the city; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.